**அன்புமிக்க வாடிக்கையாளருக்கு,**

இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட வாடிக்கையாளர் சான்றிதழின் தேவைப்பாடொன்றைப் பின்பற்றி முக்கிய நிகழ்வுகள் பற்றிய தொடர் ஆவணமொன்றை (KFD) தயாரித்துள்ளோம். இதன்மூலம் உங்களுக்குத் தேவைப்படுவதும் உங்களுக்குத் தோதானதுமான வங்கித் தொழில் விளைவுத் திட்டங்களை/சேவைகளைத் தெரிவுசெய்வதற்குத் துணைபுரியுமென உத்தேசிக்கப்படுகின்றது.

இந்த KFD ஆவணம் வெவ்வேறு வகையான இலங்கை ரூபா கணக்குகளையும் கணக்கு தொடர்பிலான விசேட சலுகைத் திட்டங்களையும் தனிப்பட்ட வங்கித் தொழிலுக்கென நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியில் கிடைக்கக்கூடிய பிரத்தியேக வெளிநாட்டு நாணயக் கணக்குகளையும் பற்றிய விரிவான விளக்கங்களைத் தருகின்றது.

ஆயினும் கீழே KFD இல் தரப்பட்டுள்ள விவரங்கள் சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தும் மாற்றங்களுக்கிணங்க மீளாய்வையும் வங்கியின் கொள்கைகளிலும் நடைமுறைகளிலும் மாற்றங்களையும் ஏற்படுத்தலாம் என்பதனையும் தயவுடன் அவதானிக்கவும்.

மேலும் தகவல்களைப் பெற விரும்பினால் www.nationstrust.com என்னும் இணையத் தளத்துடன் அல்லது 011 4711411 என்ற 24 மணிநேர சேவை நிலையத்துடன் தொடர்புகொள்ளவும்.

கீழே தரப்பட்டுள்ள எவையேனும் கணக்குகள் தொடர்பில் முறைப்பாடுகள் எவையுமிருப்பின் முறைப்பாடு பற்றிய அறிவித்தல் அடங்கிய சுருக்கமான எழுத்திலான அறிக்கையொன்றை பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்: முறைப்பாடுகள் தீர்வு அலுவலர், நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீ, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 அல்லது தொலைபேசி இல. **[+94(0)11 471141]/** மின்னஞ்சல் [customerservice@nationstrust.com] ஊடாக தொடர்பு கொள்ளவும். நாம் விரைவாக உங்களுக்குப் பதிலளிப்போம்.

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீ 118. இல. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 2

| கணக்கு பற்றிய விவரம் | வாடிக்கையாளர் நலன்கள் | கட்டண வகைகளும் ஏனைய வங்கி அறவீடுகளும | கணக்கை ஆரம்பிப்பதற்கான நடைமுறைகள | பிரதான நியதி நிபந்தனைகள் |
|---|---|---|---|---|
| அ)சேமிப்புக் கணக்குகள் | | | | |
| **நேஷன்ஸ் மக்ஸ் போனஸ் சேமிப்பு கணக்கு**<br>இது வட்டி தேறும் கணக்கொன்றாகும். கணக்கில் பராமரிக்கும் மீதிக்கு ஏற்ப வாடிக்கையாளர்களுக்கு போனஸ் வட்டி மூலம் வெகுமதியளிக்கும் கணக்காகும். | • வட்டி வீதம் 2.5% ஆ.வ ஆகும்.<br><br>ரூ.100,000 /- பெறுமதியான இலவச ஆயுள் காப்புறுதி<br><br>ரூ. 25,000 வரையான இலவச விபத்து காப்புறுதி<br><br>சேமிக்கு மீதியின் அடிப்படையில் மேலதிக பற்று வசதி<br><br>கணக்கில் ஏற்படும் பணப்பரிமாற்றல் குறித்து இலவச SMS அறிவுறுத்தல்.<br><br>காலாண்டு கணக்குக் கூற்று நிரல் வழங்கப்படும்<br><br>இன்டர்நெட் வங்கிச் சேவை, மொபைல் வங்கிச் சேவை மற்றும் SMS வங்கிச் சேவை வசதிகள்<br><br>டெபிட் அட்டை வசதி | • வாடிக்கையாளரின் கணக்கு மீதி ரூ. 1,000 த்திலும் குறையும் போது ரூ. 50 அறிவிடப்படும்.<br><br>• கணக்கினை இடைநிறுத்தும் கட்டணம்<br><br>• டெபிட் அட்டைக்கான வருடாந்த கட்டணம் மற்றும் சகல நிலையான பரிமாற்றல் கட்டணங்கள். | சேமிப்புகளுக்கு வங்கியின் வழமையான கணக்கு ஆரம்பிக்கும் படிவங்கள் பூர்த்திசெய்யப்பட்டு பின்வருவனவற்றுடன் சேர்த்து வங்கியின் ஏதேனும் கிளைக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்:<br><br>• தேசிய அடையாள அட்டையின் (தே.அ.அ.)/செல்லுபடியான கடவுச்சீட்டின் பிரதி<br><br>• வதிவிட முகவரி தே.அ.அ./கடவுச் சீட்டிலுள்ள முகவரியுடன் வித்தியாசப்படின் முகவரியை செவ்வைப்பாாப்பதற்கு ஆவணச்சான்று அவசியப்படும். | • தகைமையுள்ள நபர்கள்: 18 வயதுக்கு மேற்பட்ட,செல்லுபடியான தேசிய அடையாள அட்டை. கடவுச்சீட்டு வைத்திருக்கும் இலங்கையில் வதிவுள்ள இலங்கை நாட்டினத்தவர்கள்.<br>• குறைந்தபட்ச பூர்வாங்க வைப்பீடு ரூபா 2000<br>• வங்கியால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படும் நிலையான மற்றும் போனஸ் வட்டி வீதங்களின் படி வட்டி திரளும்.<br>• ஏனைய வைப்புகளை போன்ற பிடித்து வைத்தல் வரி செல்லுபடியாகும்.<br>• போனஸ் வட்டியை பெறுவதற்கு தகுதிபெற மாதமொன்றுக்கு ஒரு மீளப்பெறுதலை மாத்திரமே மேற்கொள்ள அல்லது மீளப்பெறுதலை செயற்படுத்தாமல் இருக்க வேண்டும்.<br>• காப்புறுதி அனுகூலத்தை பெற கணக்கில் ரூ. 10,000 ஆகக் குறைந்த மீதியாக பராமரிக்கப்பட வேண்டும்.<br>• வாடிக்கையாளர் காப்புறுதி அனுகூலத்தை பெற்றிட அருகிலுள்ள கிளையை தேவையான ஆவணங்களுடன் நாட வேண்டும். |